நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சேமிப்புக் கிடங்கு அமைக்க விவசாயிகளுக்கு மானியம்**

First Published : 22 Oct 2010 09:13:39 AM IST

புதுச்சேரி, அக். 21: சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக தட்டாஞ்சாவடியிலுள்ள பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் கூறியுள்ளது.

÷இந்த அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் உலர்களம் மற்றும் தானியச் சேமிப்புக் கிடங்கு அமைக்க வேளாண்துறை மானியம் அளிக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை தங்கள் பகுதியிலுள்ள உழவர் உதவியகத்தில் பெற்றுக் கொள்ளலாம். உலர்களம் அமைக்க 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 1.5 லட்சம், தானியச் சேமிப்புக் கிடங்கு அமைக்க 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சம் ரூ. 3 லட்சம் வழங்கப்படும்.

÷இத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் 1.5 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். உலர்களம் குறைந்தபட்சம் 300 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்க வேண்டும். தானிய சேமிப்புக் கிடங்கு குறைந்தபட்சம் 150 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள உழவர் உதவியகத்தில் உள்ள வேளாண் அலுவரை தொடர்பு கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அளிக்க கடைசி நாள் 25.11.2010 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொட்டுநீர்ப் பாசன செயல் விளக்கம்**

First Published : 21 Oct 2010 01:43:44 PM IST

திருவண்ணாமலை, அக்.20: துரிஞ்சாபுரம் ஒன்றியம், சொரகுளத்தூர் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற வயல் விழாவில் சொட்டுநீர் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

சொரகுளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் நடைபெற்ற இவ்விழாவை துணைப்பதிவாளர் (பயிற்சி) திருப்பதி தொடங்கி வைத்தார். மத்திய கூட்டுறவு வங்கி கள அலுவலர் முத்துசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சொட்டுநீர்ப் பாசன முறையை பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள், அதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. சொரகுளத்தூர், வெளுகனந்தல் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர்.

**முறையான ஆவணங்களின்றி உரம் விற்பனை செய்த கடைகள் மீது நடவடிக்கை**

First Published : 21 Oct 2010 11:57:28 AM IST

கரூர், அக். 20: முறையானப் பதிவுச் சான்றிதழ் இல்லாமல் உரம் விற்பனை செய்த உரக் கடைகள் மீது கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கி. ஜெகதீசன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டம் குளித்தலை, கிருஷ்ணராயபுரம், தோகைமலை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனைக் கடைகளில் உதவி இயக்குநர் பூ. மதனகோபால் தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் இளம்பூரணர், காதர்மொகைதீன், நாகேந்திரன், ராஜா ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இரு நாள்கள் நடைபெற்ற இந்த ஆய்வில் கிருஷ்ணராயபுரத்திலுள்ள கடைகளில் ர் படிவச் சான்று இல்லாமல் 15 மெ. டன் உரம் விற்பனை செய்யப்பட்டது தெரிய வந்தததும் அங்கு விற்பனை முடக்கப்பட்டுள்ளது, மேலும், முறைகேடாக உரம் விற்பனையில் ஈடுபட்ட 34 கடைகள் மீது உரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிகழாண்டில் கரூர் மாவட்டத்தில் 236 உரமாதிரிகள் எடுக்கப்பட்டதில் 7 நிறுவனங் களின் உரங்களில் சத்துக்குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் மீது உரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உர விற்பனையாளர்கள் உரங்களை அரசு நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பனை செய்யக் கூடாது. உரம் பெறும் விவசாயிகளுக்கு ரசீது வழங்குவதோடு, உரங்களின் விலையை விவசாயிகளுக்கு தெரியும் இடத்தில் எழுதி வைக்க வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் உரங்களின் விலையை அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதன்படி 50 கிலோ மூட்டையின் விலை விபரம்: (அடைப்புக் குறிக்குள் உர நிறுவனத்தின் பெயர்) யூரியா - ரூ. 276.12., பொட்டாஷ் - ரூ. 262.46., 16:20:0(கொரமண்டல்) - ரூ. 336.70., 20:20:0(மங்களூர் கெமிக்கல்ஸ்) - ரூ. 309, 20:20:0:13 (ஃபாக்ட்) - ரூ. 358.54, 20:20:0:13(ஸ்பிக்) - ரூ. .368.94, 20:20:0:13(இப்கோ) - ரூ. 357.99, 20:20:0:13(ஜபிஎல்) - ரூ. 358.54, 20:20:0:13(கொரமண்டல்) - ரூ. 358.54, 14:35:14(கொரமண்டல்) - ரூ. 456.82, 15:15:15:(ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ்) - ரூ. 297.49, 12:32:16(கொரமண்டல்ஜுவாரி) - ரூ. 428.32, 10:26:26(இப்கோ) - ரூ. 410, டி.ஏ.பி - ரூ. 517.40, டிரிபிள் சூப்பர் பாஸ்பேட் (ஜபிஎல்) - ரூ. 418.60.

குறிப்பிட்ட விலைக்கு மேல் உரங்களை விற்றால் உர விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உரம் சம்பந்தமான புகார்களை விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் தெரிவிக்கலாம். இதன் படி கரூர் - 04324-220299, தாந்தோன்றிமலை - 04324-255225, 255020, க.பரமத்தி -04320-283299, அரவக்குறிச்சி -04320-231299, குளித்தலை -04323-222101, தோகைமலை -04323-252808, கடவூர் -04323-251252, கிருஷ்ணராயபுரம் -04323-243342 என்ற எண்களில் புகார் தெரிவிக்கலாம் என்றார் அவர்.

## கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் பருவமழை பொய்த்ததால் விவசாயம் பாதிப்பு

First Published : 21 Oct 2010 11:27:03 AM IST

கொடைக்கானல், அக். 20: கொடைக்கானல் மேல்மலைப் பகுதிகளான பூம்பாறை,

மன்னவனூர், போலூர், கிளாவரை, பழம்புத்தூர், பூண்டி, புதுப்புத்தூர், குண்டுபட்டி உள்பட பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் உருளை, காரட், பீன்ஸ், பூண்டு போன்றவை அதிக அளவில் பயிரிடப்படும்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன் பல கிராமப் பகுதிகளில் பீன்ஸ் பயிடப்பட்டிருந்தது. இந்தாண்டு கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால் பயிரிடப்பட்டிருந்த பீன்ஸ் விளைச்சல் பாதிப்பு அடைந்தது.

போதிய மழை இல்லாததாலும் விளைச்சல் குறைவாக இருந்தது விளைந்த பீன்ப்ஸ எடுத்து மார்க்கெட்டு அனுப்பும் நேரத்தில் சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்ததால் செடி அழுகி பூச்சி தாக்கியதில் பீன்ஸ் தரம் குறைந்து காணப்பட்டது. இதனால் விலையும் மிகக் குறைவாகச் சென்றது. தரமான பீன்ஸ் ஒரு கிலோ ரூ. 40-க்கு விற்பனை

செய்யப்படும். தற்போது ரூ. 20-க்கு விற்பனையாவதால் விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

இது குறித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஜெயக்குமார் கூறியது:

மேல்மலைப் பகுதிகளில் அதிக அளவில் விவசாயம் செய்யப்படுகிறது கிராமப் பகுதிகளுக்கு தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் பார்வையிட்டு விவசாயிகள் ஆலோசனைகள் வழங்கியும் மானியத்தில் விதைகள், உரம், பூச்சி மருந்துகள் கொடுக்க

நடவடிக்கை எடுக்க வேண்டும் விலை இல்லாத நேரங்களில் மாற்றுப் பயிர்களை விவசாயம் செய்வதற்கும் விவசாயிகளுக்கு உதவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**விவசாயிகளுக்கான கருத்தரங்கு**

First Published : 21 Oct 2010 10:20:36 AM IST

நெய்வேலி, அக். 20: கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த வனவியல் விரிவாக்கப் பிரிவு சார்பில் சவுக்கு சாகுபடியில் ஊடுபயிர் குறித்த கருத்தரங்கு நெய்வேலி இந்திராநகரில் புதன்கிழமை நடைபெற்றது.

÷3 மாவட்டங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்குக்கு ஓய்வுபெற்ற முதன்மை வனப் பாதுகாவலர் கே.சுப்ரமணியம் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் பல்வேறு தேங்கு, குமிழ், தீக்குச்சி தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பெருமரங்கள், சந்தன மரம், சிவப்பு சந்தன மரம், வேங்கை, மலை வேம்பு, மூங்கில் உள்ளிட்ட மரங்களை நவீன முறையில் வளர்த்தல் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

÷மேலும் உலக வெப்பமயமாதலைத் தடுப்பதற்கு மரம் வளர்ப்பது அவசியம் என்றும், காற்றில் உள்ள மாசுக்களை அகற்றி ஆக்சிஜனை அதிகரிக்க மரங்களை அதிகளவில் வளர்க்க வேண்டும் என்றும், ஆறு, ஏரி, குளங்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்களை வளர்ப்பதன் அவசியம் குறித்தும் பேராசிரியர் எம்.பி.ராமானுஜம், கே.சுப்ரமணியன், வெங்கடகிருஷ்ணன், கிசான் நடராஜன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

÷முன்னதாக கடலூர் வனவிரிவாக்க அலுவலர் குமாரவேலு வரவேற்றார். விழுப்புரம் வனவிரிவாக்க அலுவலர் எம்.ஏழுமலை நன்றி கூறினார்.

**கிடங்குகளில் வீணாகும் தானியம்: கோழிப் பண்ணைக்கு வழங்க பரிந்துரை**

First Published : 21 Oct 2010 10:48:18 AM IST

நாமக்கல், அக். 20: மத்திய அரசு கிடங்குகளில் வீணாகும் தானியங்களை, கோழிப் பண்ணைகளுக்கு வழங்குமாறு தமிழக முதல்வர் மூலம், மத்திய அரசுக்கு சட்டப் பேரவை உறுதிமொழிக் குழு பரிந்துரை செய்யும் என குழுத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தகவல் தெரிவித்தார்.

அவர், நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியது: தமிழகத்திலேயே கோழிப் பண்ணைத் தொழிலுக்குப் பிரசித்தி பெறற மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் சில கோழிப் பண்ணைகளை சட்டப் பேரவை உறுதிமொழிக் குழு பார்வையிட்டது. அப்போது, கோழிப் பண்ணையாளர்கள் தரப்பில் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. மத்திய அரசு கிடங்குகளில் வீணாகும் தானியம், மானிய விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு அம்மனுவில் கோரியுள்ளனர்.

மத்திய அரசின் கிடங்குகளில் வீணாகும் தானியத்தை உரிய முறையில் பயன்படுத்த உச்சநீதிமன்றமே உத்தரவிட்டுள்ளது.

எனவே, அவ்வாறு வீணாகும் தானியங்களை, சலுகை விலையில் தமிழக கோழிப் பண்ணையாளர்களுக்கு மத்திய அரசு வழங்க வேண்டும். இது தொடர்பாக, தமிழக முதல்வர் மூலம் மத்திய அரசை வலியுறுத்த, சட்டப் பேரவை உறுதிமொழிக் குழு பரிந்துரை செய்யும் என்றார்.

தினமலர்

**காப்பீட்டுத் திட்டத்தில் பயனடைய வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,02:15 IST

சிதம்பரம்:காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து கீரப்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:கீரப்பாளையம் வட்டாரத்தில் சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். இத்திட்டத்தில் பயிர் கடன் பெறும் விவசாயிகள் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் தேசிய மயமாக்கப் பட்ட வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பிரிமியத் தொகையை செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.விவசாயிகள் பயன் பெறும் வகையில் சிறு, குறு, விவசாய கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு ஏற்ப பிரிமியத் தொகையில் அரசு மானியமாக 50 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. எனவே விவசாயிகள் ஏக்கர் வீதம் கணக்கிட்டு பிரிமியத்தொகை செலுத்தி பயன்பெறலாம். இத்திட்டத்தில் இந்த ஆண்டு டிசம்பர் 15ம் தேதி வரை பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட் டுள்ளது.

**மழையால் மாடு விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,02:52 IST

ஈரோடு: ஈரோடு மாட்டுச் சந்தையில் மாடு விற்பனை நேற்று ஜோராக நடந்தது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை கூடுகிறது. இங்கு வாரந்தோறும் 1,000க்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியான சிவகிரி,மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர்,

கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை ஆகிய பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகளை விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர்.

ஈரோடு மாட்டுச் சந்தை வியாபாரி ஒருவர் கூறியதாவது: சென்ற வாரத்தை காட்டிலும் ஈரோடு மாட்டு சந்தைக்கு மாடுகளின் வரத்து ஓரளவுக்கு நன்றாக இருந்தது. வழக்கத்தைவிட நேற்று மாடுகளின் வியாபாரமும் நன்றாக இருந்தது. சென்னை, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநில வியாபாரிகள், அரசு வழங்கும் கடன் திட்டத்தின் கீழ் மாடுகளை அதிகளவில் வாங்கிச் சென்றதால், விற்பனை நேற்று நன்றாக இருந்தது. மாவட்டத்தில் நன்கு மழை பெய்துள்ளதால், இனிவரும் வாரங்களில் மாடு விற்பனை நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். நேற்றைய நிலவரப்படி 400 சிந்து மாடுகளும், 300 எருமை மாடுகளும் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். அவற்றில் சிந்து இன மாடுகள் 15 ஆயிரம் முதல் 28 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகளில் 12 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்தி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,01:35 IST

அவிநாசி : அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் இந்த வாரம் நடந்த பருத்தி ஏலத்துக்கு 650 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 510 மூட்டை அதிகம். வரத்து நன்றாக அதிகரித்த நிலையில், அனைத்து ரகங்களும் ரூ.30 முதல் ரூ.70 வரை விலை அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.
அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,950 முதல் ரூ.4,350 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ஆகியன ரூ.4,100 முதல் ரூ.4,650 வரை, சுரபி மற்றும் எம்.சி.யு., 5 ரூ.4,250 முதல் ரூ.4,745 வரை, மட்டம் ரூ.1,900 முதல் ரூ.2,100 வரை.இந்த வாரம் ரூ.3.50 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

**பயறு பயிரிட்டால் லாபம் விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,02:00 IST

அன்னூர் : "பயறு வகைகளை பயிரிட்டால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்' என வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்தார்.தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் கீழ்கதவுகரையில் சென்னை "ரங்கா கிரியேஷனின்' கலை நிகழ்ச்சி நடந்தது. பயறு வகைகள் பயிரிடுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்தும், அதிக அளவில் பயறு உற்பத்தி பெற செய்ய வேண்டியவைகள் குறித்தும் பாடல் பாடி நடனம் ஆடினர். ஓரங்க நாடகம் நடித்தனர்.

வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் பேசியதாவது: நாட்டில் தேவைப்படும் பயறு வகைகளில் 75 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. பாசி, உளுந்து, தட்டை, துவரை உள்ளிட்ட பயறு வகைகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. விசை தெளிப்பான் வாங்க 2,000 ரூபாயும், கை தெளிப்பானுக்கு 800 ரூபாயும், தானியங்களை உலரவைக்க தார்பாய் வாங்கவும் அரசு மானியம் அளிக்கிறது. ஒரு கிலோ பயறுக்கு 20 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சரியான முறையில் கண்காணித்து பயறு விளைவித்தால் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம்.இவ்வாறு உதவி இயக்குனர் பேசினார்.விழாவில், உதவி வேளாண் அலுவலர் வேல்முருகன், ஆத்மா விவசாயிகள் சங்க தலைவர் செல்வராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**விதைப்பண்ணை அமைக்க முடிவு உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,01:31 IST

உடுமலை : உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவில் 1,250 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது," என விதை சான்று துறை உதவி இயக்குனர் பழனிக்குமார் கூறினார்.கோவை, திருப்பூர் மாவட்டத்திலுள்ள தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி முகாம் உடுமலை வேளாண் உதவி இயக்குனர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.விதை சான்று அலுவலர் மகாலிங்கம் வரவேற்றார்.

கோவை விதைசான்று உதவி இயக்குனர் பழனிக்குமார் தலைமை வகித்து பேசியதாவது: நடப்பு பருவத்தில் விதை சான்று துறையால் உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவில் 1,250 ஏக்கர் பரப்பளவில் தனியார் விதை உற்பத்தியாளர்களால் நெல்

பயிரில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. விதை சான்று அலுவலர்கள் விதை பண்ணைகளை தொடர்ந்து கண்காணித்து, தொடர் சான்றுப்பணி மேற்கொண்டு வருகின்றனர்.தரமான சான்று விதைகளை உற்பத்தி செய்திட, விதை வயல்களில் கலவன் பயிர்களையும், களைகளையும் நீக்கி சுத்தமாக வைத்திருப்பது விதை உற்பத்தியாளர்களின் கடமையாகும். இதற்கான அறிக்கையை சான்றழிப்பு துறையில் பதிவு செய்தல், வயல் தரம் பேணுதல், சுத்திகரிப்பு மற்றும் சான்று செய்தல் வரை கடைபிடிக்க வேண்டிய விதை சான்று நடைமுறைகளை முழுமையாக தெரிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்றார். கோவை விதை சான்று அலுவலர் (தொழில் நுட்பம் ) பெருமாள்சாமி,விதை சான்று அலுவலர் உதயகுமார், வேளாண் அலுவலர் திருமகள் ஜோதி, விதை சான்று அலுவலர் ராஜாராம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஏறுமுகத்தில் வெங்காயம் விலை விவசாயிகள் முகத்தில் மலர்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,01:33 IST

பொங்கலூர் : வெங்காய அறுவடை சீசன் நிறைவு, பண்டிகை சீசன் ஆரம்பித்துள்ளதால் ஏற்பட்டுள்ள தேவை அதிகரிப்பு, விவசாயிகள் விதை வெங்காயம் கொள்முதல் செய்ய ஆரம்பித்துள்ளது, ஏற்றுமதிக் கான சந்தை வாய்ப்பு போன்ற காரணங்களால் வெங்காயம் விலை ஏறுமுகத்தில் உள்ளது.பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த வைகாசி பட்டத்தில் சின்ன வெங்காயத்தை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்திருந்தனர். அறுவடை சீசன் ஆரம்பித்ததில் இருந்து, கடந்த இரண்டு மாதங்களாக, ஒரு கிலோ சின்ன வெங்காயம் 12 முதல் 16 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தால், தங்களது தோட்டங் களிலேயே பல விவசாயிகள் இருப்பு வைத்தனர்.

ஆடிப்பட்டத்தில் நடவு செய்த சின்ன வெங்காயம், மார்க்கெட்டுக்கு வரத்துவங்கியதால் விலை ஏறாமல் மந்தமாக இருந்தது. புரட்டாசி மாதத்தில் சில நாட்கள் மழை பெய்ததால், வெங்காய பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு தரமும் குறைந்தது. ஈரப்பதத்துடன் அறுவடை செய்த வெங்காயத்தை, உடனே விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இருப்பு வைக்க முடியாததால், புதிய வெங்காயத்தை மிக குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர்.இதேநேரத்தில், வெங்காய அறுவடை சீசன்

முடியும் தருவாயில் உள்ளதாலும், ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளதாலும் விலை ஏறுமுகமாக உள்ளது. தற்போது பண்டிகை சீசன் என்பதால் வெங்காய தேவை அதிகரித்துள்ளது.

மேலும், புரட்டாசி, கார்த்திகை மாதங்களில் வெங்காய நடவு சீசன் ஆரம்பிப்பதால், விதை வெங்காயம் கொள்முதல் செய்ய விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதுவும் வெங்காயத்துக்கான விலை அதிகரிக்க காரணம். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, இருப்பு வைத்துள்ள வெங்காயத்தை விவசாயிகள் விற்பனை செய்ய முன்வந்துள்ளனர். நல்ல தரமான வெங்காயம், கடந்த வாரம் கிலோ 21 ரூபாய் வரை விற்பனையானது. இந்த வாரம் 25 ரூபாய் வரை விலை போகிறது. கடைகளில் சில்லரை விலையில் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அறுவடை சீசனில் வந்த விலைக்கு விற்காமல், நல்ல விலை கிடைத்தால் விற்பனை செய்யலாம் என்று இருப்பு வைத்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வெற்றிலை கொள்முதல் விலை சரிவு : கி.புரம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,02:59 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் பயிரிட்டுள்ள வெற்றிலைக்கு போதிய விலை இல்லாததால், விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர், மகாதானபுரம், லாலாப்பேட்டை, கருப்பத்தூர் ஆகிய பகுதிகளில் வெற்றிலை பயிர் விளைவிக்கப்படுகிறது. வெற்றிலை ரகங்களான, பச்சை, கற்பூரம், வெள்ளை கொடி ஆகியவை பயிரிடப்படுகிறது.

தற்போது வெற்றிலை சாகுபடி பரவலாக பல்வேறு பகுதியில் துவங்கியுள்ளதால், லாலாப்பேட்டை, கிருஷ்ணராயபுரம் பகுதி வெற்றிலைக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு இதேகால கட்டத்தில் 100 கவுளி கொண்ட வெற்றிலை மூட்டைக்கு 4,000 ரூபாய் முதல் 4,200 ரூபாய் வரை விலைபோனது.

ஆனால், தற்போது கவுளி ஒன்றுக்கு 4 ரூபாய் முதல் 6 ரூபாய் வரை விவசாயிகளிடம் வெற்றிலை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் 100 கவுளி கொண்ட மூட்டையுடைய விலை 400 முதல் 600 ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது. இதனால், மூட்டைக்கு 3,600 ரூபாய்வர குறைவான விலைக்கு அளிக்கப்படுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தீபாவளி பண்டிகை மற்றும் முகூர்த்த காலம் துவங்குவதால் விலையேற்றம் குறித்து விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

விவசாயி மணிக்கம் கூறியதாவது: கடந்த ஆண்டு இதே மாதம் வெற்றிலை விலை அதிகரித்து விவசாயிகள் லாபம் அடைந்தனர். வெற்றிலை உற்பத்தி அப்போது குறைவாக இருந்தது. பண்டிகை காலம், முகூர்த்தம் போன்றவை காரணமாக வெற்றிலை வியாபாரம் சூடிபிடிக்க வேண்டும். மாறாக, தற்போது வெற்றிலை தஞ்சை, கும்பகோணம், மாயவரம், திருவாரூர் பகுதிகளில் இருந்து அதிக அளவில் மார்க்கெட்டுக்கு வருவதால் லாலாப்பேட்டை வெற்றிலைக்கு வரவேற்பு குறைந்துள்ளது. தற்போது அதிக அளவில் திருப்பூர், பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வெற்றிலை அனுப்பப்படுகிறது. முகூர்த்த காலம் துவங்குவதால் வெற்றிலை விலை ஏறினால்தான் விவசாயிகள் பயனடையமுடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**தென்னை பொருட்களுக்கு தள்ளுபடி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,03:05 IST

மதுரை : தென்னை வாரியத்தின் சார்பில், மதுரை மேலமாசி வீதியில் "காயர் போர்டு' அலுவலகத்தில், மிதியடிகளுக்கு 10 சதவீத தள்ளுபடி அறிவிக்கப் பட்டுள்ளது. தென்னை நார் மிதியடிகள் 50 முதல் 350 ரூபாய் வரையில் உள்ளன. இவற்றின் அடிப்பகுதியில் ரப்பர்பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. முழுவதும், தென்னை நாரில் உருவாக்கப்பட்ட மிதியடிகள் 700 ரூபாய் வரையில் கிடைக்கின்றன.10 சதவீத தள்ளுபடி உண்டு. இதுதவிர, அழகிய தென்னை நார் விரிப்புகள், தலையணைகளும் உள்ளன.

**எண்ணெய் விலை உயர்வுபூண்டு விலை குறைவு:சிவகங்கை மார்க்கெட் நிலவரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:26 IST

சிவகங்கை:சிவகங்கை மார்க்கெட்டில் எண்ணெய் விலை உயர்ந்து, பூண்டு விலை குறைந்துள்ளது.மளிகை விலை விபரம்:கிலோ 69 க்கு விற்ற துவரம் பருப்பு- 68; 2-ம் ரகம் - 65; 55 க்கு விற்ற தட்ட பயறு-56; 2-வது ரகம் -48; 40 க்கு விற்ற கடலை பருப்பு- 38;2-வது ரகம் -36; 77க்கு விற்ற உளுந்து-78; 2-ம் ரகம்-72; வெள்ளை கொண்டை கடலை -62; சிகப்பு-36; 69 க்கு விற்ற பாசி பருப்பு-68; 2-ம் ரகம் -65, பாசி பயறு-62; 2-ம் ரகம் -58; மொச்சை பயறு-48; 67 க்கு விற்ற வெள்ளை மொச்சை-65; பட்டாணி-24; வெள்ளை பட்டாணி-22; 48 க்கு விற்ற மல்லி-50; 2-வது ரகம் -45; புளி-48; நயம்-52; 40 க்கு விற்ற பொரிகடலை -42; வத்தல்-45; 2-ம் ரகம் - 40; 280 க்கு விற்ற மலைப்பூண்டு- 240; தரப்பூண்டு-120; வெல்லம் -32; கருப்பட்டி (வேம்பார்) -80; சர்க்கரை -28; சோம்பு-140; வெந்தயம் -52; 290 க்கு விற்ற கசகசா - 280; 190 க்கு விற்ற சீரகம்-180; கடுகு-45; மிளகு - 260; 200 க்கு விற்ற மஞ்சள் -180.

அரிசி (கிலோ): கல்சர் பொன்னி 33லிருந்து 32; டீலக்ஸ் பொன்னி-28; 21 க்கு விற்ற ஐ.ஆர்., 20 - 20; 24 க்கு விற்ற செல்ல பொன்னி - 22; பொன்னி பச்சரிசி -30; 21 க்கு விற்ற ஐ.ஆர்., 20 பச்சரிசி- 21; 22 க்கு விற்ற இட்லி அரிசி - 23; கோதுமை - 22; சோளம் -16; கம்பு -18; கேப்பை -16; வரகரிசி -36 ரூபாய்.

எண்ணெய் நிலவரம்: கடலை எண்ணெய் லிட்டர் 85லிருந்து 88, 47 க்கு விற்ற பாமாயில் - 48; நல்லெண்ணெய் - 90, 90 க்கு விற்ற தேங்காய் எண்ணெய் -95 வரை உயர்ந்துள்ளது.

**மாவில் தண்டு துளைப்பானை கட்டுப்படுத்துவது குறித்து செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,03:33 IST

தூத்துக்குடி : வானரமுட்டியில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் மா மரத்தில் தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்துவது குறித்து செயல் விளக்கத்தினை விவசாயிகளுக்கும், வானரமுட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் செய்து காண்பித்தனர். இந்த செயல் விளக்கத்தில், தண்டு துளைப்பானால் பாதிக்கப்பட்ட மரங்களில் சேதமடைந்த பட்டைகளை நீக்கி அந்த இடங்களில் 1மி.லி மோனோகுரோட்பாஸ் மருந்தை 10 மி.லி நீருடன் கலந்து பெயிண்ட் பிரஷ்ஷால் தடவுதல் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று

விளக்கிக் கூறி அவற்றை செயல்படுத்தியும் காட்டினர். இறுதியில் மாந்தோப்பின் உரிமையாளர் பாலமுருகன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு உதவும் "அலாரம்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:00 IST

கடலூர்: இரவு நேரங்களில் பயிர்களுக்கு விவசாயிகள் நீர் பாய்ச்சுவது என்பது சிரமமான ஒன்று. இரவு முழுவதும் கண் விழித்து இருக்க வேண்டும். மேலும், போதுமான தண்ணீர் வயலில் பாய்ந்து விட்டதா என்பதை அவ்வப்போது சென்று பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த பிரச்னைக்கு தீர்வு காணும், "அலாரம்' ஒன்றை, அண்ணாமலை பல்கலை வேளாண் கல்லூரி இளநிலை இறுதியாண்டு படிக்கும் மாணவர் ராஜேஷ்குமார் கண்டுபிடித்துள்ளார். "இரண்டு அங்குல அகலம், மூன்றடி நீளம் கொண்ட பிளாஸ்டிக் பைப்பில் இக்கருவியை, நீர் பாய்ச்ச வேண்டிய வயலில் பொருத்த வேண்டும். பின், மின் ஒயர் மூலம் இக்கருவியை அலாரத்துடன் இணைக்க வேண்டும். வயலில் பாய்ச்ச வேண்டிய தண்ணீரின் அளவை அக்கருவியில் பதிவு செய்து விட்டால், பதிவு செய்யப்பட்ட அளவு நீர் பாய்ந்தும் அலாரம் ஒலிக்கும். பின், மோட்டாரை "ஆப்' செய்து கொள்ளலாம். எளிய முறையில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருவியை 200 ரூபாய் செலவில் செய்து விடலாம்' என்கிறார் ராஜேஷ்குமார்.

**எட்டாத உயரத்தில் தேங்காய் விலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:00 IST

சேலம்: வாழப்பாடி, சுற்றுப்பகுதி கிராமங்களில் தென்னை மரங்கள் அதிகம். இங்கு, தேங்காய் உற்பத்தி தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 10 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர். நல்ல மழை பெய்தால், சராசரியாக ஒரு மரத்தில் இருந்து, ஆண்டுக்கு 140 முதல் 160 தேங்காய் வரை கிடைக்கும். இந்த தேங்காய்கள் தரம் பிரிக்கப்பட்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும், ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா,

புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்து விட்டது. இதனால், தேங்காய்களின் விலை உயர்ந்துள்ளது. தற்போது, 1,000
தேங்காய்கள் ஐந்தாயிரம் ரூபாய் என விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

**மருந்து தயாரிக்கும் மகளிர் குழு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:00 IST

கடலூர்: சிதம்பரத்தை அடுத்த தில்லைவிடங்கன் டான்வா பண்ணை மகளிர் சுய உதவிக்குழுவினர், பூஞ்சானக் கொல்லி மருந்து தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், 2.50 லட்ச ரூபாய் செலவில் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களை கொள்முதல் செய்து, "சூடோ மோனாஸ் புளூரன்ஸ்' மற்றும் "ரைக்கோடெர்மா விரிடி' ஆகிய பூஞ்சானக் கொல்லி மருந்துகளை வேளாண் துறை உதவியுடன் உற்பத்தி செய்கின்றனர். இந்த மருந்துகளால் நெல், வாழை, பருத்தி, கரும்பு, மணிலா, உளுந்து, சோளம், கேழ்வரகு, கம்பு, வெள்ளரி, இஞ்சி, தக்காளி, வெண்டை, உருளை மற்றும் தென்னை உள்ளிட்ட பயிர் வகைகளை நோய் தாக்குதல்களில் இருந்து கட்டுப்படுத்த முடியும். சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்யும் இந்த மகளிர் சுய உதவிக் குழுவினர், விவசாயத்தை பாதுகாப்பதுடன் போதிய லாபமும் அடைகின்றனர்.

**பழமைக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:00 IST

சேலம்: ரசாயன உரங்கள் பயன்பாடு அதிகரித்ததால் மண் வளம் கெட்டு நோய் தாக்குதல், உற்பத்தி குறைவு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. அரிசியின் தரம் குறைந்து, சாப்பாடு சுவையும் மாறி விடுகிறது. இதனால், பசுந்தழையை அடியுரமாக்கி நெல் நடவு செய்ய, தற்போது பனைமரத்துப்பட்டி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பயிர் நடவு செய்யும் வயலில் முன்னதாகவே, அவுரி, தக்க பூண்டு, கொளுஞ்சி ஆகிய செடிகளின் விதைகளை விதைக்கின்றனர். இச்செடிகள் 30 நாட்களில் பச்சை பசேலென

ஐந்து அடி உயரத்திற்கு வளர்ந்து விடுகின்றன. தழைச்சத்து நிறைந்த இந்த செடிகளை, டிராக்டர் உதவியுடன் சேற்றில் மூழ்க வைத்து, அடியுரமாக்கி விடுகின்றனர். சில நாட்களில் பசுந்தழைகள் மக்கி, உரமாகி பயிர்கள் செழித்து வளர உதவுகின்றன. "பசுந்தாள் உரங்கள் பயன்படுத்துவதால் மண் வளம் பெருகுகிறது. மேலும், ரசாயன உரத்தை விட மிகக் குறைந்த செலவே ஆகிறது' என்கின்றனர் இப்பகுதி விவசாயிகள்.

***சீத்தாப்பழ விற்பனை அமோகம்***

பதிவு செய்த நாள் : அக்டோபர் 22,2010,00:00 IST

புதுச்சேரி: தமிழகத்தில், திருப்பத்தூர் மற்றும் ஆந்திராவில் அதிகளவில் சீத்தாப் பழம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த பழங்கள், புதுச்சேரி பெரிய மார்க்கெட்டிற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை, மூன்று முதல் நான்கு டன்கள் அளவிற்கு கொண்டு வரப்படுகின்றன. பின், ரகம் வாரியாக பிரித்து விற்பனைக்காக குவிக்கப்படுகின்றன. ஒரு கிலோ 15 முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சீத்தாப் பழம் அதிக சுவை கொண்டதாகவும், மருத்துவத் தன்மையுடனும் இருப்பதால் அதிகளவில் மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI

***உழவர் சந்தைகள்… 1–ம் பக்க தொடர்ச்சி***

*பெரும்பாலானவை, மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். பணவீக்கத்தின் தாக்கம், சாதாரண மற்றும் ஏழை மக்களை பாதிக்காத வகையில் முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசாங்கம், ரேஷன் கடைகளில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், கிலோ 1 ரூபாயில் அரிசியை வழங்கி வருகிறது. இதுதவிர, பருப்பு வகைகள், பாமாயில், கோதுமை போன்றவையும் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, மலிவு விலையில் மளிகை பொருட்களும் சிறு பாக்கெட்டுகளில் வினியோகிக்கப்பட்டு வருகிறது.*

பதுக்கலைத் தடுக்க...

எங்களது அனுபவங்களை அடிப்படையாக வைத்து விலைவாசி கட்டுப்பாட்டுக்கான திட்டங்களை முன்வைக்கிறேன். விளைநிலங்களில் இருந்து நுகர்வோருக்கு பொருட்கள் சீராக சென்றடைவதற்கு, வேளாண் உற்பத்தி சந்தைகளிடையே போட்டியை உருவாக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்று கருத்து இல்லை. விவசாய சந்தைதளை ஒருங்கிணைத்து, விளைபொருள்களை சோதனை செய்து, தரம் உயர்த்துவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். விளை பொருள்களை சந்தைப்படுத்தும் (மார்க்கெட்டிங்) வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். அவற்றை சேமித்து வைப்பது போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நாம் பலப்படுத்த வேண்டியது அவசியம்.

விவசாய உற்பத்தி சந்தையில் போட்டியை ஏற்படுத்துவது, விவசாயிகள், நுகர்வோர் இருதரப்பினருக்கும் பலன்அளிப்பதாகவே இருக்கும். எனினும், விவசாய சந்தைப்படுத்துதல் சங்கங்களையும் புறந்தள்ளிவிட முடியாது. தமிழகத்தில் சிறப்பாக செயல்படும் விவசாய சந்தைப்படுத்தல் சங்கங்களால், கள்ளச்சந்தை, பதுக்கல் போன்றவை தடுக்கப்பட்டுள்ளன.

முன்பேர வர்த்தகம்

முதல்–அமைச்சர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று, அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவை, முன்பேர வர்த்தகத்தில் இருந்து மத்திய அரசால் நீக்கப்பட்டன. எனவே, இந்த உணவு வகைகளை தொடர்ந்து, நீக்கப்பட்ட பட்டியலிலேயே வைக்க இந்த திட்டக்குழு பரிந்துரைக்க வேண்டும். தமிழகத்தில் செயல்படுத்தப்படும் உழவர் சந்தைகளால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகளே நேரடியாக விளைபொருள்களை விற்பனை செய்வதால் நுகர்வோருக்கும், விவசாயிகளுக்கும் அது பயனுள்ளதாக உள்ளது. எனவே, அனைத்து மாநிலங்களிலும் இதனை அமைக்க அரசுக்கு பரிந்துரைக்கலாம். விவசாயிகளுக்கு எளிதாக தகவல் அளிக்கும் வகையில் தூர்தர்ஷன் சானலில் விவசாயிகளுக்கான 24 மணி நேர சேவை இருக்க வேண்டும். அது அந்தந்த மாநில மொழிகளில் ஒளிபரப்பட வேண்டும்.

அதிக விலை விற்கும் பொருள்களை...

கூட்டுறவுத்துறைகள் முக்கியமாக, விவசாய வேளாண் சங்கங்கள், உணவு பதப்படுத்தும் பணிகளை முக்கிய பணியாக எடுத்து செய்ய வேண்டும். விளைபொருள்கள் சீராக வினியோகிக்கப்பட, பெருமளவில் நிதி முதலீடு செய்யப்பட வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் அதிக முதலீடு செய்யப்பட்டுள்ளதால், பல்வேறு சந்தைகளை

நன்றாக இணைக்க முடிந்துள்ளது. இங்கு வகுக்கப்பட்டுள்ள செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. ஆனால், இவற்றுக்கு மத்திய அரசு நிதி உதவியை அளித்து செயல்படுத்த உதவ வேண்டும். பலவீனமான கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்த, தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்பட்டு வரும் மானிய திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

சந்தையில் அதிக விலையில் விற்கப்படும் சில முக்கிய பொருட்களை மட்டுமாவது அதிக அளவில் வாங்கி, அடக்க விலையிலேயே விற்றால், விலைவாசியை கட்டுப்படுத்த முடியும். இதற்காக, “விலைவாசி கட்டுப்படுத்தும் நிதியை'' மத்திய அரசு ஏற்படுத்துவதற்கு இக்குழு பரிந்துரைக்கலாம். அரிசியை போலவே, பருப்பு வகைகளை கொள்முதல் செய்தோ, இறக்குமதி செய்தோ, பொதுவினியோக முறையில் வழங்க வேண்டும். உணவுப்பொருள் இறக்குமதியில், மத்திய அரசு தற்போது கடைப்பிடித்து வரும் நடைமுறை சிறப்பானதாக இல்லை. பருப்பு வகைகளின் தட்டுப்பாட்டை போக்க, குறைந்தபட்ச சேமிப்பு இருப்பை மத்திய அரசு வைத்திருக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955–ஐ மேலும் கடுமையாக்க வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

## கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இம்மாதம் 1–ந் தேதி தொடங்கிய புதிய பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக அதிகரிக்கும் என மறுமதிப்பீடு

*செய்யப்பட்டுள்ளது. முந்தைய மதிப்பீட்டில் இது 2.30 கோடி டன்னாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு, கரும்பு பயிரிடும் பரப்பளவு 16 சதவீதம் உயர்ந்துள்ளதே காரணமாகும்.*

*ஆலைகள் சங்கம்*

*இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் நடப்பு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என ஏற்கனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த மதிப்பீட்டுக்கு இணையாக தற்போது மத்திய வேளாண் அமைச்சகம் தனது புதிய மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது. ஆக, சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்தவரை, இது மிகச் சிறந்த பருவமாக இருக்கும் என இத்துறையைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன.*

*உலக அளவில் சர்க்கரை பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ள இந்தியா, சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் ஆண்டிற்கு 2.30 கோடி டன் சர்க்கரை தேவைப்படுகிறது. இந்நிலையில் வரும் பருவத்தில் சர்க்கரை உற்பத்தி தேவைப்பாட்டை விஞ்சிடும் வகையில் இருக்கும் என்று தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் சர்க்கரை விலை குறைய வாய்ப்புள்ளது.*

*சர்க்கரை உற்பத்தி அதிகரிக்க உள்ளதால், வரும் 2010–11–ஆம் பருவத்தில் இந்தியா குறைந்தபட்சம் 25 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து சர்வதேச அளவில் சர்க்கரை விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய சூழலில், சர்க்கரை ஏற்றுமதிக்கு அதிகாரப்பூர்வ தடை ஏதுமில்லை. எனினும் மத்திய உணவு அமைச்சகம், 2009–ஆம் ஆண்டிலிருந்து சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவதில்லை.*

*எத்தனால்*

*நடப்பு புதிய பருவத்தில், எத்தனால் உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க சர்க்கரை நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. சர்க்கரை அளிப்பு தாராளமாக உள்ள நிலையில் சர்க்கரை உற்பத்தி வாயிலான லாப வரம்பு சரிவடையும் என இந்த நிறுவனங்கள் கருதுகின்றன. இதனை ஈடு செய்யும் வகையில், உப பொருளான எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க தயாராகி வருவதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.*

## ***உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 15.53%–ஆக குறைந்தது***

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், அக்டோபர் 9–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 15.53 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தை (16.37%) விட 0.84 சதவீதம் குறைவாகும்.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், முந்தைய ஆண்டின் இதே வாரத்தை விட உருளைக்கிழங்கு (50%), வெங்காயம் (8.62%) விலை மிகவும் குறைந்திருந்தது.
அதேசமயம், பருப்பு வகைகள் (4.44%), தானியங்கள் (5.88%), கோதுமை (7.01%), அரிசி (4.72%), பால் பொருள்கள் (21.65%), பழங்கள் (15.65%) மற்றும் காய்கறிகள் (12.26%) விலை மிகவும் அதிகரித்திருந்தது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம், சென்ற செப்டம்பர் மாதத்தில் 8.62 சதவீதமாக உயர்ந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பூண்டு, மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம் போன்ற மளிகை பொருட்களின் விலை திடீர் உயர்வு துவரம்பருப்பு மூடைக்கு ரூ.500 குறைந்தது

சென்னை, அக்.22–
சமையல் செய்வதற்கு தேவையான முக்கிய மளிகை பொருட்களான பூண்டு, மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம் ஆகியவற்றின் விலை உயர்ந்தும், அதே நேரத்தில் துவரம்பருப்பு மூடைக்கு ரூ.500 குறைந்தும் உள்ளது.
விலைவாசி உயர்வு
வீட்டு வாடகை உயர்வு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தினமும் சமையல் செய்வதற்கு தேவைப்படும் முக்கிய மளிகை பொருட்களான பூண்டு, மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம் போன்ற பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்து வருவது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.
கடந்த வாரம் ஒரு கிலோ முதல் ரக மிளகு ரூ.220–க்கு விற்பனையானது, ரூ.240

ஆகவும், 2–வது ரக மிளகு ஒரு கிலோ ரூ.160–க்கு விற்பனையானது, ரூ.180 ஆகவும், சீரகம் ஒரு கிலோ ரூ.160–க்கு விற்பனையானது, ரூ.190 ஆகவும், கடுகு ஒரு கிலோ ரூ.30–க்கு விற்பனையானது, ரூ.40 ஆகவும், வெந்தயம் ஒரு கிலோ ரூ,45–க்கு விற்பனையானது, ரூ.55 ஆகவும் உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் இந்த ஆண்டு புளி விளைச்சல் மிகவும் குறைந்துள்ளதால் கடந்த வாரம் முதல் ரக புளி ஒரு கிலோ ரூ.65–க்கு விற்பனையானது, ரூ.80 ஆகவும், 2–வது ரக புளி கடந்த வாரம் கிலோ ரூ.50–க்கு விற்பனையானது, ரூ.65 ஆகவும் விலை அதிகரித்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார். எந்த ஆண்டும் இல்லா வகையில் ஒரு கிலோ மலை பூண்டு ரூ.250 வரை விற்பனையாகிறது.

எண்ணெய் உற்பத்தி குறைந்தது

இந்தியாவில் ஆண்டு தோறும் சமையல் எண்ணெயின் தேவையைவிட உற்பத்தி குறைவாக உள்ளது. இதனால் 50 சதவீதம் சமையல் எண்ணெயை மத்திய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. இதனால் கடந்த வாரம் ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.46–க்கு விற்பனையானது, ரூ.50 ஆகவும், சன்பிளவர் ஆயில் முதல் ரகம் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.64–க்கு விற்பனையாது, ரூ.68 ஆகவும், இரண்டாம் ரக சன்பிளவர் ஆயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.58–க்கு விற்பனையாது, ரூ.62 ஆகவும், முதல் ரக தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.95–க்கு விற்பனையானது, ரூ.110 ஆகவும், 2–வது ரக தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.75–க்கு விற்பனையானது, ரூ.85 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

முதல் ரக ஒரு லிட்டர் அக்மார்க் நல்லெண்ணெய் பாக்கெட் ரூ.125–க்கு விற்பனையானது, ரூ.130 ஆகவும், இரண்டாம் ரக அக்மார்க் நல்லெண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.100–க்கு விற்பனையானது, ரூ.105 ஆகவும், முதல் ரக கடலை எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.85–க்கு விற்பனையானது, ரூ.95 ஆகவும், இரண்டாம் ரக கடலை எண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.80–க்கு விற்பனையானது, ரூ.90 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. தீபாவளி பண்டிகை நெருங்கும் நேரத்தில் எண்ணெய் வகைகள் விலை உயர்ந்து வருவது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரிசி மூடைக்கு ரூ.100 குறைவு

ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து அதிக அளவில் அரிசி, நெல் வரத்து உள்ளது. இதனால் தமிழ்நாட்டில் அரிசி விலை தற்போது மூடைக்கு ரூ.100

குறைந்துள்ளதாக அரிசி மொத்த வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு அரிசி கொண்டு வர தடை எதுவும் இல்லை. அதே நேரத்தில் ஆந்திராவில் இருந்து தமிழ்நாட்டுக்கு நெல்–அரிசி கொண்டு வர ஆந்திர அரசு தடை விதித்துள்ளது. இந்த தடையை ஆந்திர அரசு நீக்கினால் தமிழ் நாட்டில் அரிசி விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர்.

வடமாநிலங்களில் சரியான நேரத்தில் பெய்த தென்மேற்கு பருவ மழையால் துவரம்பருப்பு விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால் 100 கிலோ கொண்ட முதல் ரக துவரம்பருப்பு மூடை கடந்த வாரம் ரூ.6,500–க்கு விற்பனையானது, ரூ.6,000 ஆக குறைந்துள்ளது. அதாவது துவரம்பருப்பு மூடைக்கு ரூ.500 வரை குறைந்துள்ளது. இரண்டாம் ரக துவரம்பருப்பு 100 கிலோ மூடை ரூ.5,800–க்கு விற்பனையானது, ரூ.5,000 ஆக சரிந்துள்ளது.

மத்தியபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் உளுந்து அறுவடை தொடங்கி, தற்போது மார்க்கெட்டுகளுக்கு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் 100 கிலோ கொண்ட ஒரு மூடை முதல் ரக உளுத்தம்பருப்பு ரூ.7,400–க்கு விற்பனையானது, தற்போது ரூ.6,500 ஆகவும், ஒரு மூடை பர்மா உளுத்தம்பருப்பு ரூ.7,000–க்கு விற்பனையானது, தற்போது ரூ.6,000 ஆகவும் குறைந்துள்ளது. தீபாவளி நேரத்தில் பருப்பு வகைகள் மேலும் விலை குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

## பந்தலூரில் நாளை நடக்கிறது சிறு விவசாயிகளின் கண்டன பேரணி

பந்தலூர்,அக்.22–

பந்தலூரில் நாளை (சனிக் கிழமை) கோரிக் கைகளை வலியுறுத்தி தேயிலை சிறு விவசாயிகள் கண்டன பேரணி நடத்த உள்ளனர்.

சிறு விவசாயிகள் சங்க கூட்டம்

தேயிலை சிறு விவசாயிகள் முன்னேற்ற சங்க கூட்டம் பந்தலூரில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு சங்க தலைவர் அப்துல்ரகுமான் தலைமை தாங்கினார். செயலாளர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில், சிலரின் பச்சை தேயிலையை தொழிற்சாலை நிர்வாகம் கொள்முதல்

செய்யாமல் திடீர் என மறுத்து விட்டதை கண்டிப்பது, தனியாருக்கு சாதகமாக விலை நிர்ணயம் செய்வதை கண் டிப்பது, இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காததை கண்டிப்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (சனிக்கிழமை) பந்தலூ ரில் கண்டன பேரணி நடத்து வது என தீர்மானிக்கப்பட் டது.

தடுக்கும் போராட்டம்

போராட்டத்திற்கு பிறகு தீர்வு ஏற்படாவிட்டால் 1,536 சிறு விவசாயிகள் பச்சை தேயிலையை தொழிற் சாலைக்கு கொள்முதல் செய்வதை தடுக்கும் போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் துணை தலைவர் கந்தசாமி, செயற்குழு உறுப்பினர் ராஜன்தோமஸ், மெகபூப், மகேஷ், பாப்பச்சன், முகமது, தாமஸ், வேலாயுதம் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் செயற்குழு உறுப்பினர் யாக்கோபு நன்றி கூறினார்.